


திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தலைமையில் மண், மொழி, மானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது.இதில் மாநில மாணவரணி செயலாளர் இரா. இராஜீவ்காந்தி சிறப்புரை ஆற்றினார். நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார். வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் ரமேஷ், சீனிவாசன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், ஜெ.சர்மிளா, மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட கோபாலசத்திரத்தில் கழகத் தலைவர் – முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து கூடியிருந்த பொதுமக்களுக்கு உறுப்பினர் படிவங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பேரூராட்சிச் செயலாளர் தி.வானுவாமலை, மாவட்ட துணைச் செயலாளர் தமயந்தி, மாநில தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வசூடாமணி, பிரேம் ஆனந்த், மகளிர் அணி தலைவர் ஜெயமாலதி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - துணைத் தலைவர் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

### மதுரை தெற்கு மாவட்டம்

மதுரை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட நா.அன்புச்செல்வன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **துரை ச.சரவணன்**, (7, சூரச்ஹார பொட்டல், திருமங்கலம், மதுரை மாவட்டம்) அவர்கள் மதுரை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணைத் தலைவராகவும்;

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மா.பாலமுருகன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து,

**எம்.கார்த்திக்கண்ணன்**, (1/169, மேட்டுத் தெரு, சிந்தாமணி, மதுரை-9)

**விக்னேஷ்**, (141/13ஏ, அம்மாபட்டி, பேரையூர் வட்டம், மதுரை-703)

**தே. ரமேஷ்குமார்**, பழனி ஆண்டவர் கோவில் தெரு, மதுரை மாவட்டம்

ஆகியோர் மதுரை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட அ.சங்கர் மற்றும் என்.வி.முரளி ஆகியோர் கழகப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாத காரணத்தால், அவர்களை வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக **ராஜேஸ் ரெத்தினமணி**, (20/112, கன்னக்குறிச்சி நடுவூர், கணபதிபுரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) மற்றும் மு.பழனி, (19, அம்மன் கோவில் தெரு, வீரநாராயணமங்களம்,தாழக்குடி, கன்னியாகுமரி மாவட்டம்) ஆகியோர் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட அரவிந்த்ராம் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **க.துரைமுருகன், பி.இ.,** (தெற்கு தெரு, பு.கொணலவாடி, உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.) அவர்கள் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 02.07.2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

## தி.மு.க. பொறியாளர் அணி

# புதுச்சேரி - காரைக்கால் மாநில, தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. பொறியாளர் அணியின் புதுச்சேரி - காரைக்கால் மாநில, தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### புதுச்சேரி – காரைக்கால் மாநிலம்

அமைப்பாளர் - ர. சக்திபிரியன் (எ) பாலாஜி 13, வயல்கரை வீதி, காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) இ. சைய்யது தாவுத்ஸா 68, வயல்கரை வீதி, காரைக்கால். 2) ஜி.கே. மணி 19, வடக்குத் தெரு, கீழவாஞ்சூர், டி.ஆர். பட்டினம், காரைக்கால். 3) தே. விஜயராகவன் 29, சாவடி தெரு, வடமட்டம், நெடுங்காடு, காரைக்கால். 4) ம. அகஸ்டின்பால் 28, பசும்பொன் நகர், 4வது குறுக்குத் தெரு, காரைக்கால். 5) க. ஜோதிராஜ் 55, கொத்தலம் பேட் தெரு, தருமபுரம், காரைக்கால்.

### தெற்கு தொகுதி

அமைப்பாளர் - ஹா. முகம்மது அபூதல்ஹா 11/1, நூல்கடை வீதி, காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) சீ. பிரக தீஸ்வரன் 14, அம்மன் கோவில் தெரு, காரைக்கால். 2) ச. அருண் 2, சுப்பையா பிள்ளை நகர், காரைக்கால். 3) நா. ரசூலில்லாரிம் 36, நூல்கடை வீதி, காரைக்கால்.

### திருநள்ளார் தொகுதி

அமைப்பாளர் - உ. ஹரிஹரசுதன் 52, பெரிய கோவில் தெரு, திருநள்ளார், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ. ராம்நாத் பழைய சினிமா கொட்டகை தெரு, அம்பகரத்தூர், காரைக்கால். 2) த.ச. தமிழேந்தி வாணியத் தெரு, அம்பகரத்தூர், காரைக்கால். 3) சா. சுஃபாத் 122, எல்.ஜி.ஆர். நகர், அம்பகரத்தூர், காரைக்கால். 4) இ. முகம்மது சொகீப் 11/1, எம்.ஜி. தெரு, அம்பகரத்தூர், காரைக்கால்.

### நெடுங்காடு தொகுதி

அமைப்பாளர் - மோ. சரவணன் 46, சிவன் கோவில் தெரு, பூவம், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. அமர்நாத் 12, அந்தோணியர் கோவில் தெரு, மத்தலங்குடி, நெடுங்காடு, காரைக்கால். 2) தே. சிலம்பரசன் 29, சாவடி தெரு, வடமட்டம், நெடுங்காடு, காரைக்கால். 3) சு. பிரதீப் 144, சோனியா காந்தி நகர், வரிச்சிக்குடி வடக்கு, காரைக்கால். 4) அ. அஜித்குமார் 133, ஜீவா நகர், கோட்டுச்சேரி, காரைக்கால்.

### நிரவி – திருபட்டினம் தொகுதி

அமைப்பாளர் - ஜெ. பாலமுருகன் (எ) அசோக் 14, திட்டச்சேரி சாலை, நிரவி - திருபட்டினம், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) மா. முகேஷ் 23, பிள்ளையார் கோவில் தெரு, கீழவாஞ்சூர், நிரவி - திருபட்டினம், காரைக்கால். 2) தி. சசிக்குமார் 53, அபிராமி அம்மன் தெற்கு தெரு, நிரவி - திருபட்டினம், காரைக்கால். 3) வ. முருகதாஸ் 39, பிள்ளையார் கோவில் தெரு, நிரவி - திருபட்டினம், காரைக்கால். 4) உ. சத்தியராஜ் 30, பிள்ளையார் கோவில் தெரு, காக்காமொழி, நிரவி - திருபட்டினம், காரைக்கால்.

### வடக்கு தொகுதி

அமைப்பாளர் - தி. அசோக்குமார் 21, சேனியர் குளத்து வீதி, முதலாவது குறுக்கு தெரு, வலத் தெரு, காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) ப. தவனேஷ் 3, ராயல்சிட்டி மாணவர் விடுதி பின்புறம், கீழகாசாகுடி, காரைக்கால். 2) அ. அஸ்ரப் அலி 2, வ.உ.சி. தெரு, பி.கே. சாலை, காரைக்கால். 3) ரா. பெருமாள் 15, எச்.எம்.ஏ., நகர் பிள்ளை தெரு வாசல், காரைக்கால். 4) து. கரிகாலன் 8, கோவிந்தசாமி நகர், கீழகாசாவடி, காரைக்கால்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02-07-2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

## சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது!

# அனைவரும் சமம் - மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது!

## நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஜுலை 4–

அனைவரும் சமம் மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது. இந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர் களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.

தமிழகத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்ப மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதனை சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள். நெல்லை மாவட்டத்தில் 5.40 கோடி ரூபாய் மதிப்பில் நெல்லை மாநகராட்சி மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆகியவையில் அமைக்கப்பட்டுள்ள 12 நகர்ப்புற சுகாதார நல மையங்கள், இராதாபுரம் மற்றும் திருநெல்வேலி நகர பகுதியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட 14 புதிய கட்டிடங்கள் திறக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக நெல்லை, தச்சநல்லூர் சிதம்பரநகர் பகுதியில் அமைந்துள்ள நகர்நல மையத்தில் நடந்த்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா உள்ளிட்டோர் கலந்து கொண்டு நகர் நல மையத்தில் குத்து விளக்கு ஏற்றி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தனர்.தொடர்ந்து கர்பணித்தாய் மார்களுக்கு மருந்துகள், ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய பெட்டகமும் வழங்கப்பட்டது.

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்ச ராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு தமிழக சுகாதாரத்துறை மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. மக்களை தேடி மருத்துவம் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப் பட்டு வரும் நிலையில் ஐ.நா சபை இதனை பாராட்டி விருது வழங்கியுள்ளது. மகப்பேறு காலங்களில் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் கர்ப்பிணி பெண்கள் குழந்தை பேறு நடப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மருத்துவர்கள் மூலம் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

2021 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்ப பள்ளி,சமுதாய நலக்கூடங்கள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் இருந்தது, என்பதை அனைவரும் அறிந்தது. தி.மு.க அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அனைவரும் சமம், மதச்சார்பின்மை ஆகிய இரண்டையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் பொதுச் செயலாளர் பாலே தெரிவித்த கருத்து குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு அனைவரையும் இந்துக்களாக அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார் கள் 10% உயர் ஜாதியினருக்கு அனைத்து சலுகைகளும் கிடைக்க வேண்டும் அவர்களுக்கே முன்னுரிமை இருக்க வேண்டும் என்றே அவர்களின் செயல்பாடுகள் இருக்கும். அனைவரும் சமம், மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது. இந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய.அரசு செயல்பட்டு வருகிறது.



பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் நீக்கப்பட்ட விவகார குறித்த கேள்விக்கு அவர்களே (பேசி) முடித்துக் கொள்வார்கள் என பதலளித்தார். திருப்புவனம் லாக்கப் டெத் குறித்த கேள்விக்கு,இந்த சம்பவம் வன்மையாகக் கண்டிக்கக் கூடியது. மனசாட்சி உள்ள யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர் யாராக இருந்தாலும் முதல்வர் அவர்கள் விட மாட்டார். மக்களுக்கு விரோதமாக சட்டத்திற்கு புறம்பாக யார் யார் தவறு செய்தாலும் தயவு தாட்சனை இல்லாமல் நடவடிக்கை எடுப்பார். சாமானியன் வீட்டில் அரசு அதிகாரிகள் செய்த சிறிய தவறை அதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் அவர்கள் பாதிக்கபட்டவர்கள் குடும்பத்தினரிடம் வருத்தம் தெரிவித்தார். இந்த பண்பு மிகப்பெரிய மாண்பு. இதனை அரசியலுக்காக பலர் கொச்சைப் படுத்தி பேசிவருகின்றனர்.

நம்முடைய முதல்வர் அவர்கள் இவ்வளவு பெரிய மாண்புடன் சம்பவம் தவறு என்று உணர்ந்தவுடன் தாயாரிடம் சகோதரனும் வருத்தத்தை தெரிவித்திருக்கிறார்கள்.என்பதை மக்கள் நினைக்கிறார்கள். பெருமையாக நினைக்கிறார்கள்.

இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் முஅப்பாவு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ். ஆர்.ஜெகதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பி.அன்பழகன் அவர்கள் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **இ.ஆபிரகாம் மனுவேல்,** (48, கோவில் தெரு, வடக்கூர், தூத்துக்குடி - 628 001) அவர்கள் தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02-07-2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம். கிருஷ்ணன்

### ஜூலை 4 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**